**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

O.S.No.87/2022 தேதி- 22.09.2025
(P.W.1) - ஆரோக்கியஆண்டனி

குறுக்கு விசாரணை

1. எனக்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் எழுத படிக்க தெரியுமா என்றால் தமிழ் கொஞ்சம் தெரியும் ஆனால் ஆங்கிலம் தெரியாது. நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் கடலில் மீன் பிடிப்பு தொழில் செய்கிறேன். எனக்கு மாத வருமானம் எவ்வளவு வரும் என்றால் உத்தேசமாக சொல்ல முடியாது. எனக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 3 பிள்ளைகள் ஆகும். இவ்வழக்கு பட்டிகை சொத்து 4 1/2 செண்ட் சொத்து என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தில் புத்தன்புறை ஊராட்சிக்கு உட்பட்ட கதவு எண்.3/68 என்றவீடு உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன வீடு எத்தனை ஆண்டுகள் பழக்கம்முடையது என்றால் 30 வருடம் பழக்கமுடையது. இவ்வழக்கின் 2 மற்றும் 3 -ஆம் பிரதிவாதிகள் என்னுடைய சகோதரிகள் என்றால்ச ரிதான். வழக்கு சொத்தை என் அப்பா 13.07.1994 -ஆம் ஆண்டு விலைக்கு வாங்கிய சொத்து என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தில் உள்ள வீடு என் தந்தை உழைப்பில் ஏற்படுத்தப்பட்ட வீடு என்றால் என் உழைப்பிலும், என் தந்தை உழைப்பிலும் ஏற்படுத்தப்பட்டது. என்னுடைய உழைப்பிலும் வீடு கட்டப்பட்டதாக சொல்லியிள்ள நிலையில் அதை நிருபிக்க ஆவணம் ஏதும் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை.

2. மேற்சொன்ன வீடு அமைக்கும் போது கடன் ஏதும் இருந்ததா என்றால் கடன் இருந்தது. மேற்சொன்ன கடன் சம்மந்தமான ஆவணம் ஏதும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் சத்தியபிரமான வாக்குமூலத்தில் என்னுடைய மனைவின் நகைகளை வைத்து மேசொன்ன கடன்களை செலுத்தியதாக சொல்லியுள்ள நிலையில் அதை நிரூபிக்க ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் அப்பாவின் உடல்நிலை சரியில்லாதபோது மருத்துவமனையில் சேர்த்து பார்த்துக் கொண்டதற்கான ஆவணம் ஏதும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. என் அப்பா 04.08.2008-ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் சகோதரிகளின் திருமணத்தை என் அப்பா தான் நடத்தி வைத்தார் என்றால் மூத்த சகோதரியின் திருமணத்தை என் அப்பா நடத்தி வைத்தார், இளைய சகோதரியின் திருமணத்தை என் உழைப்பில் நடத்தி வைத்தேன். இளைய சகோதரியின் திருமணத்திற்கு பணம் கொடுத்தாக என் முதல் விசாரனையில் சொல்லியுள்ள

நிலையில் அதை நிரூபிக்க ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் சகோதரியின் கணவர் ஆண்ட்ரோஸ் ஆகும்.

3. 13.07.194-ல் என் சகோதரியின் கணவர் ஆண்ட்ரோஸ் கிரைய வாங்கினார் என்றால் சரியல்ல மொத்தமாக வாங்கி என் சகோதரிகள் இருவருக்கும் தலா 4 1/2 சென்ட் சொத்து கொடுத்தோம். மேற்சொன்னவாறு இருசகோதரிக்கும் 4 1/2 சென்ட் சொத்து விலைக்கு வாங்கி கொடுத்தாக சொல்லியுள்ள நிலையில் அதை நிரூபிக்க ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் அப்பா இறந்த போது வழக்கு பட்டிகை சொத்து பற்றி எந்த ஆவணம் ஏற்படுத்தவில்லை என்றால் சரிதான், வாய்மொழியாக ஏற்படுத்தினார். வாய்மொழியாக ஏற்படுத்திய போது வழக்கு பட்டிகை சொத்தில் உள்ள வீட்டை என் சகோதரிகளுக்கு வழங்கவேண்டும் என்று என் அப்பா சொன்னார் என்றால் சரியல்ல. என் அப்பா இறந்த பிறகு என் அம்மாவிற்கும் வழக்கு பட்டிகை சொத்தில் உரிமையுள்ளது என்றால் சரிதான். என்னுடைய சகோதரிகளுக்கும் வழக்கு பட்டிகை சொத்தில் பங்கு உண்டு என்றால் இல்லை. என் சகோதரிகளுக்கும் பங்கு உண்டு என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணத்தில் நான் விலைக்கு வாங்கியதாக தான் குறிப்பு உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் எந்த ஆண்டு, தேதி, மாதம் ஏற்படுத்தப்பட்டது என்று எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ.5 ஆவணத்தை யார் எழுதினார் என்ற குறிப்பும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் பிரதிவாதிகள் எந்தவித கையொப்பமும் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக போலியான நான் தயார் செய்த ஆவணம் என்றால் சரியல்ல. வழக்கிற்காக உருவாக்கப்பட்ட ஆவணம் வா.சா.ஆ.5 ஆவணம் என்றாலும் பிரதிவாதிகள் ஒருபோதும் வா.சா.ஆ.5 ஆவணத்தை ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணம் என்ன பயன்பாட்டிற்காக ஏற்படுத்தப்பட்டது என்றால் பஞ்சாயத்தில் கரம் செலுத்த வேண்டி என் சகோதரிகள் ஏற்படுத்திக் கொடுத்த ஆவணம். வா.சா.ஆ.5 ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதால் சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணம் என் பெயரில் தான் வாங்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணத்தில் நோட்டரி பப்ளிக் கையொப்பம் உள்ளது என்றால் சரிதான்.வா.சா.ஆ.7 ஆவணத்தில் உள்ள கையொப்பம் என் அம்மா உடைய கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. என் அம்மாவோ, என் சகோதரிகளோ வழக்கு பட்டிகை சொத்தை கரம் செலுத்தவேண்டி எந்த ஆவணம்

ஏற்படுத்திக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் சத்திய பிரமான வாக்குமூலத்தில் 2 மற்றும் 3 பிரதிவாதிகள் ரூ.50,000/- பெற்று கொண்டதாக சொல்லியுள்ள நிலையில் அதை நிரூபிக்க ஆவணம் ஏதும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

5. வா.சா.ஆ.6 ஆவணம் எங்கு ஏற்படுத்தப்பட்டது என்று குறிப்பு இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணம் பிரதிவாதிகளுக்கு சொத்து ஏதும் வழங்கக்கூடாது என்று கெட்ட எண்ணத்தில் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. என் சத்திய பிரமான வாக்குமூலத்தில் வழக்கு பட்டிகை சொத்து பாராமரிப்பு செலவு செய்ததாக சொல்லியுள்ள நிலையில் அதை நிரூபிக்க ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதிகள் என்னை 20.01.2021 அன்று மிரட்டியதாக சொல்லியுள்ளநிலையில் அதற்கான ஆவணம் ஏதும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்சொன்னவாறு எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. என் அப்பா இறந்த பிறகு என் தயாருக்கு உரிமைப்பட்ட 1/3 செண்ட் சொத்தை என் சகோதரிகளின் பெயருக்கு விடுதலை பத்திரம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்றாலும் அதை நான் பார்த்துள்ளேன் என்றால் சரிதான்.

6. மேற்சொன்ன ஆவணத்தின்படி எனக்கு உரிமைப்பட்ட சொத்துபோக மீதமுள்ள சொத்து என் சகோதரிகளுக்கு உரிமைப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு பட்டிகை சொத்தின் 2/3 -ல் எனக்கு ஒரு பங்கு மட்டும் தான் உண்டு என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தில் எனக்கு உள்ள மேற்சொன்ன பங்குபோக மீதமுள்ள சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. மேற்சொன்ன விடுதலை ஆவணப்படியும், வாரிசு உரிமைப்படியும் பிரதிவாதிகள் அவரவர் சொத்திற்கு கரம் செலுத்தி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. வழக்கில் கோரியுள்ள பரிகாரம் நான் கேட்க முடியாது என்றாலும் நான் பாகம் கேட்டு தான் வழக்கு தாக்கல் செய்ய முடியும் என்றாலும் விளம்புகை பரிகாரம் கோரமுடியாது என்றால் சரியல்ல. என்னுடைய சகோதரிகள் சக பங்குதாரர்கள் என்பதன் அடிப்படையில் அவர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை கோரமுடியாது என்றால் சரியல்ல. இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.